ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாத$_2$ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத$_3$ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸத$_3$ா ஹ்ருதி$_3$ ॥

பெரியாழ்வார் அருளிச்செய்த

# ॥ உய்யவுலகு ॥

*This document[*] has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

[*]This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ உய்யவுலகு ॥

## செங்கீரைப் பருவம்

‡உய்ய உலகு படைத்துண்ட மணிவயிறா!⋆
ஊழிதோறூழி பல ஆலின் இலை அதன்மேல்⋆
பைய உயோகு துயில் கொண்ட பரம்பரனே!⋆
பங்கய நீள் நயனத்தஞ்சன மேனியனே!⋆
செய்யவள் நின் அகலம் சேமம் எனக் கருதிச்⋆
செல்வு பொலி மகரக் காது திகழ்ந்திலக⋆
ஐய! எனக்கொரு கால் ஆடுக செங்கீரை⋆
ஆயர்கள் போரேறே! ஆடுக ஆடுகவே (1)

கோளரியின் உருவங்கொண்டவுணன் உடலம்⋆
குருதி குழம்பி எழக் கூருகிரால் குடைவாய்!⋆
மீள அவன் மகனை மெய்ம்மை கொளக் கருதி⋆
மேலை அமரர்பதி மிக்கு வெகுண்டு வரக்⋆
காள நன் மேகமவை கல்லொடு கால் பொழியக்⋆
கருதி வரைக் குடையாக் காலிகள் காப்பவனே!⋆
ஆள! எனக்கொரு கால் ஆடுக செங்கீரை⋆
ஆயர்கள் போரேறே! ஆடுக ஆடுகவே (2)

நம்முடை நாயகனே! நான்மறையின் பொருளே!⋆
நாவியுள் நற்கமல நான்முகனுக்கு⋆ ஒரு கால்
தம்மனை ஆனவனே! தரணி தலமுழுதும்⋆
தாரகையின் உலகும் தடவி அதன் புறமும்⋆
விம்ம வளர்ந்தவனே! வேழமும் ஏழ் விடையும்⋆
விரவிய வேலைதனுள் வென்று வருபவனே!⋆
அம்ம! எனக்கொரு கால் ஆடுக செங்கீரை⋆
ஆயர்கள் போரேறே! ஆடுக ஆடுகவே (3)

வானவர்தாம் மகிழ வன் சகடம் உருள⋆
    வஞ்ச முலைப்பேயின் நஞ்சம் அதுண்டவனே!⋆
கானக வல் விளவின் காய் உதிரக் கருதிக்⋆
    கன்றது கொண்டெறியும் கருநிற என் கன்றே!⋆
தேனுகனும் முரனும் திண்திறல் வெந்நரகன்⋆
    என்பவர் தாம் மடியச் செருவதிரச் செல்லும்⋆
ஆனை! எனக்குஒரு கால் ஆடுக செங்கீரை⋆
    ஆயர்கள் போரேறே! ஆடுக ஆடுகவே (4)

மத்தளவும் தயிரும் வார்குழல் நன்மடவார்⋆
    வைத்தன நெய் களவால் வாரி விழுங்கி⋆ ஒருங்கு
ஒத்த இணைமருதம் உன்னிய வந்தவரை⋆
    ஊரு கரத்தினொடும் உந்திய வெந்திறலோய்!⋆
முத்தின் இள முறுவல் முற்ற வருவதன்முன்⋆
    முன்ன முகத்தணி ஆர் மொய்குழல்கள் அலைய⋆
அத்த! எனக்கொரு கால் ஆடுக செங்கீரை⋆
    ஆயர்கள் போரேறே! ஆடுக ஆடுகவே (5)

காய மலர்நிறவா! கருமுகில் போல் உருவா!⋆
    கானக மா மடுவில் காளியன் உச்சியிலே⋆
தூய நடம் பயிலும் சுந்தர என் சிறுவா!⋆
    துங்க மதக்கரியின் கொம்பு பறித்தவனே!⋆
ஆயம் அறிந்து பொருவான் எதிர்வந்த மல்லை⋆
    அந்தரம் இன்றி அழித்தாடிய தாளிணையாய்!⋆
ஆய! எனக்கொரு கால் ஆடுக செங்கீரை⋆
    ஆயர்கள் போரேறே! ஆடுக ஆடுகவே (6)

துப்புடை ஆயர்கள் தம் சொல் வழுவாதொரு கால்⋆
    தூய கருங்குழல் நல் தோகைமயில் அனைய⋆
நப்பினை தன் திறமா நல் விடை ஏழ் அவிய⋆
    நல்ல திறல் உடைய நாதனும் ஆனவனே!⋆
தப்பின பிள்ளைகளைத் தனமிகு சோதிபுகத்⋆
    தனி ஒரு தேர் கடவித் தாயொடு கூட்டிய⋆ என்

அப்ப! எனக்கொரு கால் ஆடுக செங்கீரை⋆
    ஆயர்கள் போரேறே! ஆடுக ஆடுகவே (7)

‡உன்னையும் ஒக்கலையில் கொண்டு தம் இல் மருவி⋆
    உன்னொடு தங்கள் கருத்தாயின செய்துவரும்⋆
கன்னியரும் மகிழக் கண்டவர் கண் குளிரக்⋆
    கற்றவர் தெற்றிவரப் பெற்ற எனக்கருளி⋆
மன்னு குறுங்குடியாய்! வெள்ளறையாய்!⋆ மதிள்சூழ்
    சோலை மலைக்கரசே! கண்ணபுரத்தமுதே!⋆
என் அவலம் களைவாய்! ஆடுக செங்கீரை⋆
    ஏழ் உலகும் உடையாய்! ஆடுக ஆடுகவே (8)

பாலொடு நெய் தயிர் ஒண் சாந்தொடு சண்பகமும்⋆
    பங்கயம் நல்ல கருப்பூரமும் நாறி வர⋆
கோல நறும்பவளச் செந்துவர் வாயினிடைக்⋆
    கோமள வெள்ளி முளைப் போல் சிலபல் இலக⋆
நீல நிறத்தழகார் ஐம்படையின் நடுவே⋆
    நின் கனிவாய் அமுதம் இற்று முறிந்து விழ⋆
ஏலு மறைப் பொருளே! ஆடுக செங்கீரை⋆
    ஏழ் உலகும் உடையாய்! ஆடுக ஆடுகவே (9)

செங்கமலக் கழலில் சிற்றிதழ் போல் விரலில்⋆
    சேர் திகழ் ஆழிகளும் கிண்கிணியும்⋆ அரையில்
தங்கிய பொன்வடமும் தாள நன் மாதுளையின்⋆
    பூவொடு பொன்மணியும் மோதிரமும் கிறியும்⋆
மங்கல ஐம்படையும் தோள்வளையும் குழையும்⋆
    மகரமும் வாளிகளும் சுட்டியும் ஒத்திலக⋆
எங்கள் குடிக்கரசே! ஆடுக செங்கீரை⋆
    ஏழ் உலகும் உடையாய்! ஆடுக ஆடுகவே (10)

‡அன்னமும் மீன் உருவும் ஆளரியும் குறளும்⋆
    ஆமையும் ஆனவனே! ஆயர்கள் நாயகனே!⋆
என் அவலம் களைவாய்! ஆடுக செங்கீரை⋆
    ஏழ் உலகும் உடையாய்! ஆடுக ஆடுக என்று⋆

அன்னநடை மடவாள் அசோதை உகந்த பரிசு⋆
    ஆன புகழ் புதுவைப் பட்டன் உரைத்த தமிழ்⋆
இன்னிசை மாலைகள் இப்பத்தும் வல்லார்⋆ உலகில்
    எண் திசையும் புகழ் மிக்கின்பம் அதெய்துவரே (11)

॥ பெரியாழ்வார் திருவடிகளே சரணம் ॥